பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 07 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆயுஷ் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைக்கிறார்.

2. நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு முதலீடுகள் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. மாற்றியமைக்கப்பட்டுள்ள ரயில் கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

4. காஸாவில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.

5. தேசிய அளவிலான மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் லவ்லினா, நிகத் செரின் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உத்தரப்பிரதேச மாநிலத்தில் முதலாவது மஹாயோகி குரு கோரக்நாத் ஆயுஷ் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைக்கிறார்.

கோரக்பூரில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் மாநில ஆளுநர் திருமதி ஆனந்தி பென் பட்டேல், முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

இந்தப் பல்கலைக்கழகம் ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஹோமியோபதி போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகள் மூலம் சிகிச்சைகளை வழங்க உள்ளதோடு, மாணவர்களுக்கு இது தொடர்பான கல்வியையும் வழங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புதிய பல்லைக்கழகம் தொடங்கப்படுவதால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு கோரக்பூர் பகுதியில் வர்த்தக ரீதியில் மூலிகை செடிகளின் சாகுபடி அதிகரிக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

52 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பல்கலைக்கழகத்திற்கு மாநில அரசு 267 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் பல்கலைக்கழக வளாகத்தில் பஞ்சகர்மா மையம் மற்றும் புதிய வகுப்பறைகளையும், அரங்கம் ஒன்றையும் திறந்து வைக்க உள்ளார்.

<<<<>>>>

நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு முதலீடுகள் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

ஸ்பெயினில் ஐ.நா. சபை ஏற்பாடு செய்துள்ள 4வது சர்வதேச மேம்பாட்டு நிதி மாநாட்டில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர், அன்னிய நேரடி முதலீடுகளில் நிலையற்ற தன்மையால் நாடுகளில் நிதி மேம்பாட்டிற்கு தனியார் முதலீடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக கூறினார்.

உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும், புதுமையான தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கும் மூலதனம் முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் மூலதனத்தை திறம்பட அதிகரிப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியம் என்றும், இதற்கேற்ப பொருளாதார சீர்திருத்தங்களும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா வங்கித்துறையை வலுப்படுத்துவதி வருவதாகவும், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறைக்கு தேவையான நிதியை வழங்குவதற்கு மூலதன சந்தைகளை வலுப்படுத்தி வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரி செலுத்தும் முறை எளிமைப்படுத்தப்பட்ட பின்னர் சேலம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் வரி வருவாய் பலமடங்கு அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Vijayakumar – sec)**

<<<<>>>>

மாற்றியமைக்கப்பட்டுள்ள ரயில் கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

குளிர் சாதனம் அல்லாத மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கான கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு பைசாவும், குளிர்சாதன வசதி கொண்ட வகுப்பு பெட்டிகளுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

புறநகர் ரயில் கட்டணம் மற்றும் மாதாந்திர சீசன் டிக்கெட்டுகளின் கட்டணத்தில் உயர்வு ஏதும் இல்லை என்றும் ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது

ரயில் முன்பதிவுக் கட்டணம், அதிவிரைவு ரயில் மற்றும் கூடுதல் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ரயில் பயணிகளுக்கு மேலும் பல சேவைகளை செய்வதற்கு கட்டணத்தை சீரமைக்கும் இந்த நடவடிக்கை மிகவும் அவசியம் என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 58 ரூபாய் 50 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு நேற்று நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளதாக பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் விலையில் மாற்றம் ஏதுமில்லை.

<<<<>>>>

தமிழகத்தில் பொதுத்துறை மற்றும் 16 தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 349 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 297 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

இந்த சிறப்பு ஊக்கத்தொகையை தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த 4 ஆண்டுகளில் 4 லட்சத்து 79 ஆயிரத்த 30 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் 848 கோடி ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

காஸாவில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.

சமீபத்தில் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இது என்று இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸா மீதான தாக்குதலை நிறுத்தி சண்டை நிறுத்தத்திற்கு இஸ்ரேல் முன்வர வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் நேற்று தெரிவித்திருந்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெல் அவிவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் மூத்த அமைச்சர் திரு. **Ron Dermer**, பிரதமர் திரு, பெஞ்சமின் நெதன்யாகு விரைவில் வாஷிங்டன் சென்று ஈரான் மற்றும் காஸா மீதான தாக்குதல் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் உடன் பேச்சு நடத்துவார் என்று கூறினார்.

இன்று வாஷிங்டனில் அதிபர் அலுவலக அதிகாரிகளை தாம் சந்தித்துப் பேச உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய மருத்துவர்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிறந்த மருத்துவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட உள்ளன.

மருத்துவர்கள் தன்னலமற்ற சேவை செய்து ஏராளமான உயிர்களை பாதுகாத்து வருவதாக சென்னையைச் சேர்ந்த மருத்துவர் தெரிவித்துள்ளார்.

**(Voice byte – sec)**

<<<<>>>>

நாடு முழுவதும் இம்மாதம் மழை பொழிவு இயல்பைவிட அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வானிலை ஆய்வு மைய தலைமை இயக்குநர் மிருத்யுஞ்சய் மகோபாத்ரா, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த மாதம் இயல்பான அளவு மழை பெய்துள்ளதாக கூறினார்.

வடகிழக்கு மற்றும் கிழக்கிந்தியா மற்றும் தெற்கு தீபகற்ப பகுதியில் பல பகுதிகளில் இம்மாதம் இயல்பான அளவே மழை இருக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த 17 ஆண்டுகளுக்குப் பிறகு தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டுதான் கேரளாவில் ஜூன் மாதத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே மே 24ஆம் தேதி தொடங்கியது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டத்தில் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோவில் காவலாளி உயிரிழந்தது தொடர்பாக சம்பந்தப்பட்ட காவலர்கள் 5 பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக திருப்புவனம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதி விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த மரணம் தொடர்பாக காவலர்கள் 6 பேர் உடனடியாக கடந்த 28ஆம் தேதி பணியிட நீக்கம் செய்யப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல் நிலைய மரணம் தொடர்பான வழக்குகளில் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டு உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

பிரேதப் பரிசோதனை அறிக்கையின் முடிவுகள் நேற்றிரவு கிடைத்தவுடன் காலதாமதமின்றி இந்த வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு காவலர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டதாகவும் அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

தேசிய அளவிலான மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் லவ்லினா, நிகத் செரின் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஹைதராபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் லவ்லினா 75 கிலோ எடைப்பிரிவிலும், நிகத் ஜெரீன் 51 கிலோ எடைப்பிரிவிலும் அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றனர்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Bristol-**லில் இப்போட்டி இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று **Ontaria**-வில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, பிரியன்ஷு ரஜாவத், ஸ்ரீகாந்த், தன்யா ஹேமந்த உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் சேப்பாக் அணி இன்று திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

திண்டுக்கல்லில் இப்போட்டி இரவு மணி 7.15க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**